# EASTERN UNIVERSITY, SRI LANKA

## FACULTY OF ARTS AND CULTURE

## HIRD YEAR SECOND SEMESTER SPECIAL DEGREE EXAMINATION IN ECONOMICS (2012/2013 BATCH) 2014 / 2015

## (DECEMBER 2017)

## ECS 3213 BASIC ACCOUNTING

**Time: 03 Hours**

**யேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்க.**

---

கமல் கட்டட பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரியாவார். அவர் ஒவ்வொரு வருடமும் 31 யூலையில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கின்றார். 31 யூலை 2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான பரீட்சை மீதி பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு (ரூ) | செலவு (ரூ) |
|---|---|---|
| மூலதனம் | | 606,750 |
| கொள்வனவு / விற்பனை | 424,500 | 925,000 |
| திருப்பங்கள் | 2,300 | 1,700 |
| கழிவுகள் | 1,500 | 2,500 |
| ஆரம்ப இருப்பு - கட்டடப் பொருட்கள் | 98,200 | |
| பொதி செய்யும் பொருட்கள் | 12,900 | |
| வெளிச்சென்ற வண்டிக்கூலி | 17,000 | |
| வாடகை | 18,000 | |
| தொலைபேசி | 8,500 | |
| சம்பளம் | 71,200 | |
| பெற்றவட்டி | | 1,000 |
| ஏனைய செலவுகள் | 3,100 | |
| மோட்டார் வாகனம் | 1,125,000 | |
| மோட்டார் வாகனம் பெறுமான தேய்வு ஏற்பாடு 01.08.2016 | | 455,000 |
| உபகரணம் | 50,000 | |
| உபகரணம் பெறுமான தேய்வு ஏற்பாடு 01.08.2016 | | 18,000 |
| கடன்பட்டோர் / கடன்கொடுத்தோர் | 95,000 | 70,000 |
| வங்கி | 112,400 | |

| | | |
|---|---|---|
| வங்கிக் கட்டணம் | 2,000 | |
| எழுதுகருவி | 13,500 | |
| முற்பணக் காப்புறுதி 01.08.2016 | 1,650 | |
| அட்டுறு எழுதுகருவி 01.08.2016 | | 800 |
| காசு | 24,000 | |
| | **2,080,750** | **2,080,750** |

**மேலதிக தகவல்கள்**

1. இறுதி இருப்பு

   கட்டடப் பொருட்கள் ரூ.75,300

   பொதிசெய் பொருட்கள் ரூ.5,800

2. அட்டுறு எழுதுகருவி 31.07.2017ல் ரூ.700
3. மாதம் ஒன்றுக்கான வாடகை ரூ.1,000
4. மோட்டார் வாகனம், உபகரணம் போன்றவற்றுக்கான பெறுமானத்தேய்வு முறையே 10%, 5% ஆகும்.
5. பெறவேண்டிய வட்டி 31.07.2017ல் ரூ.500

**வேண்டப்படுவது:**

அ) 31 யூலை 2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான கூற்று

ஆ) 31 யூலை 2017 இல் உள்ளபடியான நிதிநிலமைக்கூற்று

**(மொத்தம் 25 புள்ளிகள்)**

02. i. கணக்கீடு என்றால் என்ன?

**(புள்ளிகள் 05)**

ii. XY நிறுவனம் 01.11.2017ல் பின்வரும் மீதிகளுடன் வியாபாரத்தை ஆரம்பித்தது.

காசுமீதி ரூ.20,000

வங்கி மீதி ரூ.18,500

சரக்கிருப்பு ரூ.20,000

கடன்பட்டோர்

AB ரூ.4500

BC ரூ.5,000

கடன்கொடுத்தோர்

SR ரூ.7,500

MR ரூ.2,500

10% வங்கிக்கடன் ரூ.10,000

மோட்டார் வாகனம் ரூ.50,000

கார்த்திகை மாதத்தில் இடம் பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

2. காசோலை மூலம் கொள்வனவு ரூ.8,000, காசுக் கொள்வனவு ரூ.7,500.
5. SR இடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.17,500.
6. MR இடமிருந்து வாங்கிய பண்டங்கள் ரூ.22,500.
7. காசுக்கு விற்ற பண்டங்கள் ரூ.10,000.
8. காசோலை மூலம் விற்பனை ரூ.12,000 அன்றே வங்கியிலிடப்பட்டது.
10. SR க்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.2,000.
11. MR க்கு திருப்பி அனுப்பிய பண்டம் ரூ.3,000.
12. AB ற்கு விற்பனை ரூ.14,500.
13. BC ற்கு விற்பனை ரூ.16,500.
14. AB, BC முறையே ரூ.1,500, ரூ.2,500 பெறுமதியான பொருட்களை திருப்பி அனுப்பினார்கள்.
17. SR, MR இருவரினதும் ஆரம்ப நிலுவைகள் முறையே 5%, 8% கழிவு நீக்கி காசோலையாக செலுத்தப்பட்டது.
20. AB, BC இருவரினதும் ஆரம்ப நிலுவைக் கடன்களை முறையே 8%, 5% கழிவு நீக்கி காசோலையாக தந்தார்கள்.
22. பெற்ற காசோலைகள் வங்கியிலிடப்பட்டது.
30. ரவியிடம் கொள்வனவு ரூ.2,500.

வேண்டப்படுவது:

அ) மூல ஏடுகளில் பதிவு செய்க.

ஆ) பேரேடுகளை தயாரிக்குக.

இ) பரீட்சை மீதியினை தயாரிக்குக.

(புள்ளிகள் 20)

(மொத்தம் 25 புள்ளிகள்)

i. கணக்கீட்டுத் தகவல்களில் அக்கரை செலுத்தும் நபர்களினை விபரிக்க.

(புள்ளிகள் 05)

ii. தனி உரிமையாளரான டிலானி நிறுவனத்தின் 01.01.2017 இல் உள்ளவாரான ஐந்தொனை கீழே தரப்பட்டுள்ளது.

## 01.01.2017 இல் உள்ளவாரான ஐந்தொனை

| | ரூ. '000 |
|---|---|
| **சொத்துக்கள்** | |
| தளபாடம், பொருத்துக்கள் (கிரயம் ரூ.180,000) | 120 |
| சரக்கிருப்புக்கள் | 70 |
| கடன்பட்டோர் | 10 |
| காசு | 30 |
| | 230 |
| **பொறுப்புக்கள்** | |
| உரிமையாண்மை | 180 |
| கடன்கொடுத்தோர் | 50 |
| | 230 |

2017 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

| இலக்கம் | திகதி ஜனவரி | கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் |
|---|---|---|
| i. | 04 | ரூ.40,000 இற்கு பொருட்கள் காசுக்கு விற்கப்பட்டது. இப்பொருட்களின் கிரயம் ரூ.30,000 ஆகும். |
| ii. | 08 | ரூ.30,000 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்டன. |
| iii. | 12 | 08.01.2017 இல் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களில் ரூ.5,000 பெறுமதியானவை விநியோகஸ்தருக்குத் திருப்பியனுப்பட்டன. |
| iv. | 15 | ரூ.50,000 இற்கு பொருட்கள் கடனுக்கு விற்கப்பட்டன. இப் பொருட்களின் கிரயம் ரூ.40,000 ஆகும். |
| v. | 18 | கடன்பட்டோரிடமிருந்து ரூ.9,000 காசு பெறப்பட்டது. |
| vi. | 20 | ஊழியருக்கான சம்பளமாக ரூ.12,000 செலுத்தப்பட்டது. |
| vii. | 25 | 01.01.2017 இலுள்ள கடன்கொடுத்தோர் மீதியானது ரூ.5,000 காசுக் கழிவுடன் காசாகக் கொடுத்துத் தீர்க்கப்பட்டது. |
| viii. | 28 | சொந்த தேவைக்காக உரிமையாளர் காசாக ரூ.5,000 ஐப் பற்றியுள்ளார். |
| ix. | 30 | மின்சாரக் கட்டணம் செலுத்தியது ரூ.2,000. |
| x. | 31 | ஜனவரி மாதத்திற்கான தளபாடம், பொருத்துக்களுக்கு பெறுமானத் தேய்வாக ரூ. 3,000 செய்யப்பட்டது. |

வேண்டப்படுவது:

கணக்கீட்டுச் சமன்பாட்டினைப் (கீழே தரப்பட்ட மாதிரி அட்டவனையினை) பயன்படுத்தி மேற்படி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகள் என்பவற்றின் விளைவுகளை அதன் பெறுமதியுடன் காட்டுக.

| இலக்கம் | சொத்துக்கள் | | | | பொறுப்புக்கள் | உரிமையான்மை |
|---|---|---|---|---|---|---|
| | தளபாடங்கள், பொருத்துக்கள் | இருப்புக்கள் | கடன்பட்டோர் | காசு | கடன்கொடுத்தோர் | |
| i. | | | | | | |
| ii. | | | | | | |
| .... | | | | | | |

(20 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

i. அட்டுறு எண்ணக்கரு, தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு, கொள்கை மாறா எண்ணக்கரு மற்றும் புத்திசாதூரிய எண்ணக்கரு போன்றவற்றினை உதாரணத்துடன் விளக்குக.

(புள்ளிகள் 10)

ii. சூரியன் நலன்புரிச்சங்கம் இளைஞர்களின் ஆங்கில மொழி அறிவினை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சிகளை நடத்துவதில் தன்னை ஈடுபடுத்தியுள்ளது. இலாப நோக்கற்ற இச்சங்கத்தின் புத்தகங்களிலிருந்து பின்வருவன பெயர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

a. 31.03.2017ல் சங்கத்திலுள்ள அங்கத்தவர்களின் எண்ணிக்கை 50 ஆக இருப்பதுடன் அங்கத்தவர் ஒருவருக்கான சந்தாக் கட்டணம் வருடமொன்றிற்கு ரூ.2,000 ஆகும்.

b. சங்கத்தின் சொத்துக்களும் பொருப்புக்களும்:

| விபரம் | 31.03.2017<br>ரூ. '000 | 31.03.2016<br>ரூ. '000 |
|---|---|---|
| நிலுவையிலுள்ள சந்தாக்கள் | 6 | 10 |
| முற்பனமாக பெற்ற சந்தாக்கள் | 12 | 8 |
| சரக்கிருப்பு - ஆங்கில மொழிப் புத்தகங்கள் | 60 | 50 |
| தளபாடங்களும் பொருத்துக்களும் | 160 | 180 |
| வங்கியிலுள்ள காசு | ? | 10 |

c. 31.03.2017ல் முடிவடைந்த வருடத்தில் பின்வரும் செலவுக் ஏற்பட்டதுடன் அவை காசாக செலுத்தப்பட்டுள்ளன.

| | ரூ. '000 |
|---|---|
| ஆங்கில மொழிப் புத்தகங்கள் வாங்கியது | 100 |
| அலுவலக வாடகை | 60 |
| கணக்கு எழுதநர்களின் சம்பளங்கள் | 60 |
| அலுவலக செலவுகள் | 30 |

d. 31.03.2017ல் முடிவடைந்த வருடத்தில் சங்கத்தினால் ரூ.200,000 நன்கொடைகள் பெறப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) 01.04.2016ல் உள்ளவாரான திரண்ட நிதி.

ஆ) 31.03.2017ல் வங்கிலுள்ள காசு.

இ) 31.03.2017ல் முடிவடைந்த வருடத்திற்கான வருமான செலவுக் கணக்கு.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

05. i. ஜதுசன் நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட புரட்டாதி மாதத்திற்கான சில்லறைக் கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

1. சில்லறை காசாளனுக்கு ரூ.2,000 முற்பணம் செலுத்தப்பட்டது.
4. எழுதுகருவி வாங்கியது ரூ.80.
6. முத்திரை செலவு ரூ.90.
8. போக்குவரத்துச் செலவு ரூ.140
9. பிரையான செலவு ரூ.70.
10. ரவிக்கு கொடுத்தது ரூ.350.
12. எழுதுகருவி வாங்கியது ரூ.80.
13. முத்திரைச செலவு ரூ.50,
15. காகிதாதி வாங்கியது ரூ.60.
17. பிரையான செலவு ரூ.120.
19. முத்திரை செலவு ரூ.110.
28. கடித உறை வாங்கியது ரூ.100.
30. சில்லறைக்காசாளனது செவுகள் மீள்நிரப்பப்பட்டது.

**வேண்டப்படுவது:**

அ) சில்லறைக் காசேட்டில் பதிவு செய்க.

ஆ) பேரேடுகளை தயாரிக்குக.

(புள்ளிகள் 10)

5. சுரேஸ் நிறுவனத்தின் கார்த்திகை மாதத்தின் காசேட்டின் படி வங்கி நிரல் பின்வருமாறு.

| திகதி | விபரம் | ரூபா | திகதி | விபரம் | ரூபா |
|---|---|---|---|---|---|
| 01.11.2017 | மீதி | 84,000 | 03.11.2017 | கொள்வனவு கா.இ 3587 | 15,250 |
| 08.11.2017 | ராஜா கா.இ 963 | 17,000 | 08.11.2017 | ரவி கா.இ 3588 | 5,250 |
| 12.11.2017 | கமல் கா.இ 2515 | 10,250 | 12.11.2017 | தர்மன் கா.இ 3589 | 1,900 |
| 19.11.2017 | விபா கா.இ 6794 | 8,750 | 20.11.2017 | மின் கா.இ 3590 | 2,500 |
| | | | 22.11.2017 | புவி கா.இ 3591 | 6,800 |
| | | | 30.11.2017 | மீதி கீ.கொ.செ | 88,300 |
| | | 120,000 | | | 120,000 |

கார்த்திகை மாதத்தின் சுரேஸ் நிறுவனத்தின் வங்கிக் கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|
| 01.11.2017 மீதி | | | 84,000 |
| காசோலை (3587) | 15,250 | | 68,750 |
| வைப்பு (963) | | 17,000 | 85,750 |
| காசோலை (3588) | 5,250 | | 80,500 |
| வைப்பு (2515) | | 10,250 | 90,750 |
| காசோலை (3589) | 1,900 | | 88,850 |
| வைப்பு (8662) | | 9,000 | 97,850 |
| நிலையியற் கட்டளை (வாடகை) | 4,000 | | 93,850 |
| வங்கிக் கட்டணம் | 1,000 | | 92,850 |
| 30.11.2017 மீதி | | | 92,850 |

**வேண்டப்படுவது:**

அ) சுரேஸ் நிறுவனத்தின் கார்த்திகை மாதத்தின் காசேட்டின் படி வங்கி மீதி வங்கிக் கூற்று மீதியுடன் வேறுபடுவதற்கான காரணத்தினை கண்டறிக.

ஆ) சீராக்கிய காசேட்டினை 30 கார்த்திகை 2017ல் தயாரித்துக் காட்டுக.

இ) 30.11.2017ல் உள்ளவாரான வங்கி கணக்கிணக்கக் கூற்றைத் தயாரிக்குக.

(15 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)